RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ஏலாதி உணர்த்தும் உணவியல் அறம்

ஏ. டயானா [அ, *]

[அ] தமிழ்த்துறை, குழந்தை இயேசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முளகுமூடு, தமிழ்நாடு, இந்தியா.

# Eladi: A Source of Food Ethics

**E. Diana [a, *]**

[a] Department of Infant Jesus college of Arts & science for women, Mulagumoodu, Tamil Nadu, India

* Corresponding Author: dianakumar1982@gmail.com

Received: 09-04-2024
Revised: 18-06-2024
Accepted: 30-07-2024
Published: 29-07-2024

Check for updates

**ABSTRACT**

This research paper discusses the virtues of diet as found in the book of Eladi. It is the special virtue of the human race. Eladi points out the idea that giving food is the most important virtue among virtues. What you give in this world will come to you in the next. It also shows that he should not say no to those who seek him and give what he can to help. Although many virtues are mentioned in Eladi, this article reveals that food virtue is one of the virtues that everyone can do.

**Keywords:** Food and medicine - Virtue by giving food - Virtue by hospitality - Virtue by flies - Virtue that reaches this world

## முன்னுரை

உயிர் வாழ வேண்டுமானால் உணவு வேண்டும். உணவு இல்லாமல் உயிர் வாழ்தல் என்பது இயலாதது என்பதை உணர்ந்து,

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறம், 18-19)

என்று மணிமேகலை குறிப்பிடுகிறது.

பண்டைய தமிழிலக்கியங்கள் தமிழர் தம் உணவு முறைகளை எடுத்து விளக்குவதுடன் உணவை பிறருக்கு வழங்குவதிலும் முன்னோடியாக விளங்கி வருவதை அறிய முடிகிறது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்னும் வரிகள் மூலம் தன்னிடமிருக்கும் உணவை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்து பிறரையும் வாழ்விக்க வேண்டும் என்னும் அறத்தை வலியுறுத்துகிறது. மனிதன் இவ்வுலகில் சிறப்புற வாழ வேண்டுமெனில் அறம் செய்ய வேண்டும். அறங்களிலேயே தலைசிறந்த அறமாக விளங்குவது பிறர் பசி ஆற்றுதலாகும் என்கிறது பதினெண்கீழ்கணக்கு நூலான ஏலாதி. உணவு கொடுத்தலால் கிடைக்கும் நல்லறங்கள் குறித்து ஏலாதி குறிப்பிடும் கருத்துக்களைக் காண்போம்.

## உணவும் மருந்தும்

'உணவும் மருந்தும் ஒன்றே

உண்பதற்காக வாழாதே வாழ்வதற்காக உண்'

என்பதற்கேற்ப மனிதன் உயிர் வாழ அரும்மருந்தாக இருப்பது உணவு. ஆகவே தான் பாரதியார் கூட தனியொருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திட வேண்டும் என்று உணவின் அவசியத்தையும், ஒருவர் உயிர் வாழ உணவு மிக மிக அவசியம் என்பதை எடுத்துரைத்துள்ளார். உடலை வருத்தும் நோயை வராமல் செய்வது தான் மருந்து. இதனை திருமூலர்,

'மறுப்பது உள நோய் மருந்து எனல் சாலும்" (திருமூலர் - எண்ணாயிரம்) என்கிறார். உடம்பினை அழியாது வைத்து இயங்கச் செய்யும் மருந்தாக உணவு உள்ளது.

## உணவு கொடுத்தலால் வரும் அறம்

துறவிகள், மாணவர், வறியவர், தென்புலத்தார், துணையற்றவர், சிறுவர், சான்றோர் ஆகியோருக்கு நல்ல உணவைப் பகுத்துக் கொடுத்தவர் மறுமையில் மன்னராவர் என்கிறது ஏலாதி.

'துறந்தார் துறவாதார் துப்பிலார் தோன்றா

திறந்தா ரீடற்றா ரிளையர் - சிறந்தவர்க்கும்

பண்ணாளுஞ் சொல்லாய் பழியிலூண் பாற்படுத்தான்

மண்ணாளு மன்னனாய் மற்று" (ஏலாதி - 35)

நொண்டிகளுக்கும், குருடர்களுக்கும், ஊமைகளுக்கும், எவரையும் தம்பக்கம் துணையாக இல்லாதவர்களுக்கும், பதிந்த நூலறிவில்லாதவர்க்கும் நீரினாற் சமைக்கப்பட்டாழ்ந்த உணவை விரும்பியளித்தவர் தேவர்களால் விரைவாக விரும்பப்படுவர் என்பதனை ஏலாதி,

'காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்

பாலில்லார் பற்றிய நூலில்லார் - சாலவும்

ஆழப் படுமூ ணமைத்தா ரிமையவரால்

வீழப்படுவார் விரைந்து' - ஏலாதி (36)

என்று குறிப்பிடுகிறது.

பொய் சொல்லாமலும், பிறர் பேசும் பொய்க்கு உடன்படாமலும், ஊனுண்ணாமலும் எவரையும் இகழாமலும், விருந்தினர் முதலியோர் வருந்தாமல் வழிதிருத்தித் தூய்மையான உணவைப் பகுத்துக் கொடுத்துண்பவன் பெரிய கடல சூழ்ந்த உலகத்துக்கு அரசனாகி பெருமையும் புகழும் அடைவான் என்பதை ஏலாதி 43 - ஆம் பாடல் எடுத்துரைக்கின்றது. பசித்துயரம் நீக்கி உணவு கொடுப்பதால் ஏற்படும் அறத்தை இதன்மூலம் அறியலாம்.

## விருந்தோம்பலால் ஏற்படும் அறம்

இல்லத்திற்கு வரும் விருந்தினரை அன்போடு உபசரித்து உணவு அளிப்பது சிறந்த அறம் ஆகும். தமிழர்களின் தலையாய பண்பு விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்பல் குறித்து வள்ளுவர் குறிப்பிடுவதாவது,

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு" (குறள் 86)

என்னும் குறட்பாவில் விருந்தோம்பலால் ஏற்படும் சிறப்பு குறித்து குறிப்பிட்டுள்ளார்.

விருந்தோம்பல் குறித்து ஏலாதி குறிப்பிடுவது விருந்தினரிடம் இன்சொல் கூறலும், கலந்துறவாடலும் இருக்கை உதவலும், அறுசுவை உணவு அளித்தலும், கடுஞ்சொல் ஒழித்து மென்சொல் வழங்குதலும் ஒருவனிடம் அமைந்தால் அவனை வானோர் விருந்தினராய் ஏற்றுக் கொள்வாராம் என்பதனை,

"இன்சொ லளாவ லிடமினிதூண் யாவர்க்கும்

வன்சொற் களைந்து வகுப்பானேல் - மென்சொல்

முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்

விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து" (ஏலாதி 7)

என்று குறிப்பிடுகிறது.

மேலும், விருந்தினர்கள் நம் வீட்டின் புறத்தில் இருக்கும் போது உயிர்காக்கும் மருந்தான அமிர்தமே கிடைத்தாலும் தனித்துண்ணாமல் விருந்தினருடன் பகிர்ந்துண்ணுவதே சிறப்பானது. இதனை,

"விருந்து புறத்ததாத் தானுண்டல்சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" (குறள் - 82)

என்று வள்ளுவரும்,

"அமிழ்தே ஆயினும் பகிர்ந்து உண்" (கொன்றை வேந்தன் - 70)

என ஔவையாரும் குறிப்பிட்டுள்ளனர்.

## ஈகையால் வரும் அறம்

"நிறை உடைமை நீர் உடைமை கொடையே" (ஏலாதி 6)

பிறர் துன்பத்தை நீக்க கொடுத்துதவுவதே சிறந்த அறமாகும். பிறரது உள்ளக்குறிப்பை அறிந்து அவர்கள் வேண்டாமலே கொடுப்பது தான் ஈகை. சங்க காலத்தில் மன்னர்கள் புலவர்களின் உள்ளக்குறிப்பை அறிந்து வாரி வழங்கினார்கள். ஒரு மனிதன் வாழும் போதும் இறந்த பிறகும் போற்றப்படுவது ஈகையால் தான். எனவே தான் வள்ளுவர் பெருமான் கூட,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றார் பொருள்வைப் பழி" (குறள் 256)

என்று பிறரது பசியைத் தீர்ப்பது, பிற்காலத்தில் உதவுவதற்கு ஏற்றப் பொருளை சேமிப்பதற்கு ஒப்பாகும் என்கிறார். மனிதனின் வாழ்நாளில் சிறந்த அறமாக விளங்குவது ஈகையே என்பதை ஏலாதி புலப்படுத்துகின்றது.

"தவம் எளிது தானம் அரிது" - ஏலாதி (2)

"படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின்" - ஏலாதி (4)

"நிறை உடைமை நீர் உடைமை கொடையே" - ஏலாதி (6)

"ஈகையால் இம்மை இன்பம் கிட்டும்" - ஏலாதி (76)

"உணவளித்து உண்பான் - அரசனாவான் - ஏலாதி (47)

என்னும் பாடல் வரிகள் ஈகையால் வரும் அறத்தை எடுத்துரைக்கின்றது.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு" - குறள் 231

என்கிறார் வள்ளுவர்.

"அறமெனப் படுவது யாது எனக் கேட்பின்

மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்" எனக் காவலன் உறைக்கும் (மணி - 25 : 228-231)

உணவு, உடை, இருப்பிடம் இவற்றை ஒருவருக்கு ஈதலே சிறந்த அறமாகும் என்று மணிமேகலையும் எடுத்துரைக்கின்றது.

"செல்வத்துப் பயன் ஈதல்' என வள்ளுவர் குறிப்பிடுவதின் மூலம் பண்டைய காலத்தில் மன்னர்களும், புரவலர்களும் தாம் சேர்க்கும் செல்வத்தை விட பிறர்க்கு கொடுப்பதில் மகிழ்வு கண்டனர். ஆதலால்

"அற்றார்க்கு

உண்டி உறையுள் உடுக்கை இவை ஈந்தார்

பண்புதராய் வாழ்வார் பயின்று" - ஏலாதி (9)

` என்று பிறர்க்கு உணவு அளித்தலை வாழ்வியல் அறமாக கொண்டிருந்தனர்.

பொய்யாமையும், கொலை புரியாமையும், புலால் உண்ணாமையும், உணவு கொடுத்தலும் ஆகிய அறங்களே விண்ணுலக வாழ்வினை அடையும் வழி எனவும், ஏலாதி வலியுறுத்துகின்றது.

## இம்மைக்கும் வந்து சேரும் அறம்

வழிநடப்பவர்க்கு உணவும், மிக்க சுமையைத் தாங்கிக் களைத்தவர்க்கு உணவும், நோயிற்கிடப்பவர்க்கு உணவும், உறவினர்க்கு உணவும், தன் உடம்பைச் சார்ந்த வானுலகிலுள்ள தென்புலத்தார்களுக்கு உணவும், அயல் நாட்டிலிருந்து வந்தவர்களுக்கு உணவும், கொடுப்பவன் இம்மையில் நல்வாழ்வு பெறுவான் என்று ஏலாதி எடுத்துரைக்கின்றது.

"வானகத்தார்க் கூணே மறுதலையார்க் கூணமைத்தான்

தானகத்தே வாழ்வான் றக' (ஏலாதி 71)

ஏலாதி 80 - வது பாடல் புலையாளர் முதியவர்களுக்கு உணவு கொடுத்து உதவி செய்தவர்கள், மறுமையில் மன்னராய் வாழ்வர் என்றுரைக்கின்றது.

## முடிவுரை

குற்றம் இல்லாத உணவை இல்லை என்பவர்க்கும், இல்லம் தேடி விருந்துண்ண வருபவர்களுக்கும் கொடுத்து உதவுவதே சிறந்த அறமாகும். இவ்வாறு பதினெண்கீழ்கணக்கு நூலான ஏலாதியானது யாருக்கெல்லாம் உணவு கொடுத்து உபசரிக்க வேண்டும், அவ்வாறு செய்வதால் தலைசிறந்த வாழ்வு வாழலாம் என்பதை உணர்த்துகின்றது. வாழ்வதற்குரிய அறங்கள் பல இருப்பினும் மிகவும் முக்கியமானதாக இருப்பது உணவு கொடுப்பதால் வரும் அறமாகும். ஆகவே வையத்துள் வாழ்வாங்கு வாழ உணவளித்து வாழ்வோம்.

## References

ஏலாதி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, (2008)

திருக்குறள், பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, (2004)

பதினெண்கீழ்கணக்கு நூல்கள், ச வே சுப்பிரமணியன் (பதி), 2007

மணிமேகலை, உ.வே.சா நூல் நிலையம், சென்னை, 1981.

புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, (2010)

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License